குறிப்பு: 31 ஜனவரி 2014 இல் குடிவரவு தடுப்பிலிருந்த எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட அறிவித்தல்களுக்குக் கொடுக்கவேண்டிய பதில்களுக்கான கடைசித்திகதி 19 அக்டோபர் 2018 ஆகும். இப்போது சமர்ப்புரைகள் முடிவடைந்துவிட்டது. முடிவு திகதிக்குப்பின்னர் கீழே குறிப்பிடப்பட்டவர்களிடமிருந்து தொடர்ந்தும் பதில்களை ஆணையாளர் ஏற்றுக்கொள்வார்:

a. 2019 அக்டோபர் 19 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ தங்களது முடிவுகளுக்குப் பொருத்தமான தகவல்களைக் கொடுப்பதற்கு வேண்டுகோள் விடுத்தும் அதற்கான பதில் கிடைக்கப்பெறாமல் அந்த நேரம் அவர்களது வேண்டுகோள் அல்லது விண்ணப்பம் உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்தி(Dept. of Home Affairs) ற்குக் கொடுக்கவேண்டிய முக்கியமான தகவல்களை வைத்திருப்பவர்கள்; அல்லது

b. ஒரு விண்ணப்பம் அல்லது வேண்டுகோள்19 அக்டோபர் 2018 முடிவுதிகதிக்கு முன்னர் மேற்கொண்டவர்கள், ஆனால் 10 செப்ரெம்பர் 2018 ம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பதில் கிடைக்கப்பெற்றவர்கள் உள்நாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு ஒரு வேண்டுகோளை அல்லது விண்ணப்பத்தை மேற்கொண்டு அண்மையில் திணைக்களத்தால் தகவல் வழங்கப்பட்டோர்.

அந்த முடிவுக்கு ஏதுவான தகவல்கள் மற்றும் விடயங்கள் அவர்களது வேண்டுகோள் அல்லது விண்ணப்பத்தைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்று 40 நாட்களுக்குள் அந்த அறிவித்தலுக்குப் பதிலை வழங்குவதற்கு மேலே குறிப்பிட்ட ( a) அல்லது ( b) க்குள் வருபவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். மேலே குறிப்பிடப்பட்டுள்ள ( a ) அல்லது (b) க்குள் அடங்குபவர்களாக அறியப்படுபவர்களைத் தனித்தனியாக உள்நாட்டலுவல்கள் திணைக்களம் தொடர்புகொள்ளும்

Australian Government

Office of the Australian Information Commissioner

ஜனவரி **31, 2014** இல் குடிவரவு தடுப்புமுகாமில் இருந்த அனைவருக்கும்

பின்புலம்

1. குடிவரவு, எல்லைப்பாதுகாப்புத் திணைக்களம்(திணைக்களம்) அதன் இணையத்தளத்தில் 10 பெப்ரவரி 2014 இல், தவறுதலாக ஒரு தடுத்துவைப்பு அறிக்கையைப் பிரசுரித்தது. 31 ஜனவரி 2014 இல் குடிவரவு தடுப்பு வளாகத்தில் அல்லது வசிப்பிடத்தை தீர்மானிப்பதற்காகச் சமூகத்தில் அல்லது தடுப்புக்குப் பதிலாக அமைந்த இடங்களிலிருந்த ஆட்களின் தனிப்பட்ட தகவல்கள் அந்த அறிக்கையில் அடங்கியிருந்தன(தகவல் அத்துமீறல்).

**1.** திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து 19 பெப்ரவரி 2014 இலும், இணைய ஆவணக்காப்பகத்திலிருந்து 27 பெப்ரவரி 2014 இலும் சொந்தத் தகவல்கள் நீக்கப்பட்டன.

2. தவறுதலாகத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தகவலுக்குரியவர்கள் எல்லோரின் சார்பாக அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் முறைப்பாடொன்று 30 ஆகஸ்ட் 2015 இல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது (பிரதிநிதித்துவ முறைப்பாடு).

பிரதிநிதித்துவ முறைப்பாடு என்றால் என்ன?

3. தனி நபர் ஒருவரது அந்தரங்கத்தில் தலையிடக்கூடிய வகையிலான செயல் மற்றும் நடவடிக்கை தொடர்பில் அவர்சார்பிலான முறைப்பாட்டை, அதேமாதிரியான முறைப்பாட்டைக்கொண்ட இன்னொருவரால், தகவல் பாதுகாப்புச் சட்டம்,1988 (*Privacy Act 1988* (Cth)) இன் கீழ் மேற்கொள்ளப்படுவது பிரதிநிதித்துவ முறைப்பாடு எனப்படும். அந்த முறைப்பாட்டிற்கு அடிப்படையான செயல் அல்லது நடவடிக்கையால் ஏற்பட்ட ஏதாவதொரு இழப்பு அல்லது சேதத்திற்கான நட்டவீட்டிற்கு அந்தக் கூட்டத்தினர் தகுதி பெறுவார்களெனரென ஆணையாளர் ஒரு பிரகடனத்தைச் செய்யக்கூடும்.

ஏன் இந்த அறிவிப்பு முக்கியமானது?

4.அத்துமீறிய தகவல் பிரசுரத்தால் ஆட்களின் சொந்தத்தகவல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளமை அடங்கலாக, இழைக்கப்பட்ட எதாவது இழப்பு அல்லது சேதத்திற்கான

நட்டவீட்டிற்கு எவராயினும்  தகுதி பெறுவார்களாவென ஒரு தீர்மானத்தைச் செய்வதற்கு,
இந்த பிரதிநிதித்துவ முறைப்பாடு பற்றி ஆணையாளருக்கு உங்களிடமிருந்து தகவல்கள் தேவைப்படுகிறது.

5. தகவல் அத்துமீறலால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் மற்றும் கீழே குறிப்பிட்டவாறு தகவல்களைக் கொடுக்காமல் விட்டால், தகவல் அத்துமீறலால் நீங்கள் எந்தவொரு இழப்பையோ அல்லது பாதிப்பையோ அடையவில்லையெனத் தான் திருப்தியடையவதாக ஆணையாளர் முடிவுக்குவரக்கூடும் அத்துடன் தகவல் அத்துமீறலால் உங்களுக்கு நட்டவீடு கிடைக்காமல் போகலாம்.

நான் என்ன செய்ய வேண்டும்?

1. தகவல் அத்துமீறலால் நீங்கள் எந்தவொரு இழப்பையோ அல்லது பாதிப்பையோ அடையாதிருந்தால், இழப்பீட்டுக்கு நீங்கள் தகுதியைப் பெறமாட்டீர்கள்; இந்த அறிவிப்பை நீங்கள் உதாசீனம் செய்யலாம்.
2. இந்த தகவல் அத்துமீறலால் இழப்போ அல்லது பாதிப்போ உங்களுக்கு ஏற்பட்டுள்ளதாக நீங்கள் நம்பினால், அத்துடன் அந்த இழப்பு அல்லது பாதிப்புக்கு நட்டவீடு பெறும் சாத்தியத்திற்கான வாய்ப்பினை விரும்பினால், உங்களுடைய இழப்பு அல்லது பாதிப்பு பற்றிய தகவல்களை ஆணையாளருக்கு நீங்கள் வழங்க வேண்டும்:

1. நீங்கள் அனுபவித்த இழப்பு அல்லது பாதிப்புக்கு பொருத்தமெனக் கருதும் எல்லாத்தகவல்களையும் நீங்கள் கட்டாயம் வழங்க வேண்டும்.

2. இந்த தகவல்கள் ஒரு சட்டபூர்வமான பிரகடன வடிவில் இருக்கலாம் அல்லது உங்கள் சொந்த வார்த்தையிலான ஒப்பமிடப்பட்ட கூற்றாக அமையலாம். தரமான படிவத்திலான சட்டபூர்வ பிரகடனம் அல்லது ஒப்பமிட்ட கூற்றுக்கு குறைவான மதிப்பளிக்கப்படும்.

3. அத்துமீறிய தகவல் வெளியிடப்பட்ட காலத்திலிருந்து அல்லது அத்துமீறிய தகவல் வெளியீடுபற்றி தாங்கள் முதலில் தெரியவந்ததிலிருந்து  அத்துமீறிய தகவல் வெளியீட்டால் தாங்கள் அனுபவித்தமை  பற்றிய விபரங்கள் அல்லது அதற்கான தங்கள் எதிர்நடவடிக்கை மற்றும் பெற்றுக்கொண்ட ஏதாவது சிகிச்சை அடங்கிய மருத்துவ அறிக்கைகள் போன்றவற்றைச் சான்றாக இந்த தகவல்கள் கொண்டிருக்கலாம்.

4. உங்கள் சொந்த வார்த்தையில் இல்லாததும், உங்கள் சார்பாக எழுதப்பட்டதுமான கடிதங்களுக்கு குறைந்தளவிலான பெறுமதி கொடுக்கப்படும்.

5. கீழே தரப்பட்ட காலவரையறைக்குள் வழங்கப்படாத தகவல்களை ஆணையாளர் தனது கரிசனைக்கு எடுக்காமல் விடக்கூடும்.

oaic.gov.au/repcomplaint இல் பதில் படிவத்தில்இந்தத் தகவலை நீங்கள் கட்டாயம் தரவிறக்கம் செய்யவேண்டும். repcomplaint@oaic.gov.au அல்லது GPO Box 5218, Sydney NSW 2001 க்கு அனுப்பியும் நீங்கள் தகவல்களைக் கொடுக்கலாம். உங்களை அடையாளம் காண்பதற்கு OAIC மற்றும் திணைக்களத்தை அனுமதிக்கும் பொருட்டு கட்டாயமாக (உங்கள் முழுப்பெயர், பிறந்த திகதி மற்றும் குடிவரவு திணைக்களத்தின் ஏதாவது பொருத்தமுடைய அடையாள இலக்கம் அடங்கலாக) போதிய தகவல்களை நீங்கள் வழங்கவேண்டும்.

4. எந்தவித தகவலையும் ஏப்ரல் **19, 2018** அன்று பிற்பகல் **4.00** மணி அளவில் நீங்கள் அனுப்பியாகவேண்டும்.

பிரதிநிதித்துவ முறைப்பாட்டிலிருந்து வெளியேறும் வாய்ப்பு

5. உங்கள் சார்பில் ஒரு பிரதி நிதித்துவ முறைப்பாட்டினைச் செய்ய நீங்கள் இணங்காவிடில் மற்றும் அதன் ஒர் அங்கமாக இருக்க விரும்பாவிடின் OAIC இணையத்தளத்திற்கு oaic.gov.au/repcomplaint க்கு வருகைதந்தும், பதில் படிவத்தைப் பூர்த்திசெய்தும் பிரதி நிதித்துவ முறைப்பாட்டிலிருந்து நீங்கள் எந்த வேளையிலும் வெளியேறலாம்.

6. வெளியேறவிரும்பினால், அத்துமீறிய தகவல் வெளியீடு குறித்த நட்டவீட்டினைப் பெறுவதற்கான உங்கள் ஆற்றல் பாதிப்படையலாம். தயவுசெய்து பதில் படிவத்திலுள்ள தகவல்களைக் கவனமாக வாசிக்கவும்.

கேள்விகளும் உதவியும்

இந்த அறிவித்தலை விளங்கிக்கொள்ள அல்லது பதிலளிக்க உங்களுக்கு உதவி தேவையானால், 1300 363 992 இல் அல்லது repcomplaint@oaic.gov.au க்கு மின் அஞ்சல் செய்து OAIC ஐத் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு: குடிவரவுத் தடுப்பில் 31 ஜனவரி 2014 இல் இருந்த அனைவருக்குமான அறிவித்தலுக்குப் பதிலளிப்பதற்குக் குழு அங்கத்தவர்களுக்கு மேலும் 14 வார கால நீடிப்பை பதில் ஆணையாளர் வழங்கியிருக்கிறார். சமர்புரைக்கான முடிவுதிகதி இப்போது 19 அக்டோபர் 2018 மாலை 4.00 மணி ஆகும். மேலும் ஒரு கால நீடிப்பு வழங்கப்படுவதை எதிர்பார்க்கவில்லை.